Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 203/2024

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கொத்தனார் வேலை |
| பெயர். | - | ஐயப்பன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | திருவேங்கடம் | சமயம் | - | |
| கிராமம் | - | பரனூர் | வயது | - | 45 |

17.12.2025

4 வது எதிரி ஆஜர், 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பரனூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடம் சம்மந்தமாகஅவ்வப்போது சிறு சிறு பிரச்சனை ஏற்படும். கடந்த 03.11.2019 ந் தேதி மதியம் சுமார் 01.00-01.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது எதிரிகள் அங்கு வந்தார்கள்.

2. அப்போது எதிரிகள் என் வீட்டின் முன்பு நின்றுகொண்டு எதிரி மயில்வேல் , ஐயப்பன் வெளியே வா டா தெவுடியா பையா என கூப்பிட்டார். நான் வெளியே வந்த போது எதிரி மயில்வேல் கையால் எனது தாடையில் குத்தினார். எதிரி நீலமேகம் கத்தியால் எனது தலையில் வெட்டினார். எதிரி தட்சிணாமூர்த்தி கத்தியால் என்னை வெட்ட வந்தார். நான் நகர்ந்ததால் எனது வலது தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது.

3. எனக்கு ரத்தம் வந்ததை பார்த்து எனது அண்ணி சுந்தரி சத்தம் போட்டார். அப்போது எதிரி தட்சிணாமூர்த்தி எனது அண்ணியின் கையை முறுக்கி அவரின் முதுகில் கையால் வேகமாக மாறி மாறி குத்தினார். பின்பு எதிரிகள் எங்களை பார்த்து இனிமேல் பிரச்சனைக்கு

வந்தால் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். காயமடைந்த என்னை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

4. நான் சிகிச்கையில் இருந்த போது போலீசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C.No. 203/2024

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கொத்தனார் வேலை |
| பெயர். | - | சுந்தரி | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | | சாமிநாதன் | சமயம் | - | |
| கிராமம் | - | பரனூர் | வயது | - | 46 |

17.12.2025

4 வது எதிரி ஆஜர், 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பரனூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கொழுந்தனார். எதிரிகளை தெரியும். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடம் சம்மந்தமாக அவ்வப்போது சிறு சிறு பிரச்சனை ஏற்படும். கடந்த 03.11.2019 ந் தேதி மதியம் சுமார் 01.15 மணியளவில் நானும், அ.சா.1-ம் வீட்டிலிருந்த போது எதிரிகள் தடி, கொடுவா, கடப்பாறை ஆகியவையுடன் அங்கு வந்தார்கள்.

2. நான் எதிரிகளை பார்த்து ஏன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்ட போது மயில்வேல் , அ.சா.1-ஐ பார்த்து தெவுடியா பையா வெளியே வாடா என்று சொல்லி அவர் மூக்கில் குத்தி விட்டார். எதிரி நீலமேகன் கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1ன் தலையில் வெட்டினார். எதிரி தட்சிணாமூர்த்தி அ.சா.1-ஐ தடியால் வெட்டவந்தார். அதை தடுத்ததால் எதிரி தட்சிணாமூர்த்தி என்னை தடியால் மூன்று அடி முதுகில் அடித்தார்.

3. பின்பு எதிரிகள் எங்களிடம் வைத்துக்கொண்டால் கொலை செய்துவிடுவதாக மிரட்டிவிட்டு சென்றார்கள்.எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருக்கோவிலூர் அரசு

மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 203/2024

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கார்பென்டர் |
| பெயர். | - | திவாகர் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | சாமிநாதன் | சமயம் | - | |
| கிராமம் | - | பரனூர் | வயது | - | 25 |

17.12.2025

4 வது எதிரி ஆஜர், 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பரனூரில் வசித்து கார்பென்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா. அ.சா.2 எனது அம்மா. எதிரிகளை தெரியும். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் சுமார் 01.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது எதிரிகள் அங்கு வந்தார்கள். அப்போது எதிரி மயில்வேல் ஐயப்பனை பார்த்து தெவுடியா பையா என அசிங்கமாக பேசினார்.

2. எதிரி நீலமேகன் ஐயப்பனை கத்தியால் தலையில் வெட்டினார். எதிரி தட்சிணாமூர்த்தி ஐயப்பனை கத்தியால் வெட்ட வரும் போது அவர் நகர்ந்ததால் அவரது இடது தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது. தடுக்க சென்ற எனது அம்மாவை எதிரி தட்சிணாமூர்த்தி கையால் முதுகில் குத்தினார். பின்பு எதிரிகள் எங்களிடம் வைத்துக்கொண்டால் கொலை செய்துவிடுவதாக மிரட்டிவிட்டு சென்றார்கள். பின்பு காயமடைந்த எனது சித்தப்பாவை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.